பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 10 2026 THURSDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் ஏற்றுமதி நடப்பாண்டில் ஒரு ட்ரில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

**3.** ஆயுஷ் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

**4.** கனடா எழுத்தாளர் **Anne Carson** -னுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

**5.** **Kigali** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>>

ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் புத்தாக்க தொழில் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை எளிதாக பயன்படுத்துவதில் அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலக வளர்ச்சி அறிக்கையை வெளியிட்டபின் உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா முன்னணி நாடாக இருப்பதாக கூறினார்.

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கவும், செலவினத்தை குறைக்கவும், வருவாயை அதிகரிக்கவும், வாழ்வாதாரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சிறு-குறு நிறுவனங்களுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் கூடுதல் வாய்ப்புகள் ஏற்படும் என்று திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>

நாட்டின் ஏற்றுமதி நடப்பாண்டில் ஒரு ட்ரில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் உச்சிமாநாடு அடுத்த மாதம் 12-ஆம் தேதி விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள நிலையில், புதுதில்லியில் இன்று பேசிய அவர், கடந்த ஆண்டு ஏற்றுமதியில் 863 பில்லியன் டாலர் என்ற சாதனையை எட்டியதாக கூறினார்.

உலக நாடுகளின் ஏற்றுமதி வளர்ச்சி மூன்று சதவீதமாக குறையவுள்ள நிலையில், நாட்டின் ஏற்றுமதி நடப்பாண்டில் 16 சதவீதம் வளர்ச்சியை எட்டும் என்று அவர் தெரிவித்தார்.

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக கூறிய அவர், ஏழு சதவீத பொருளாதார வளர்ச்சியை இந்தியா அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் 30 ட்ரில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் முதலீடுகளை ஈர்க்க அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் சிறு-குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மாநிலத்திலும் உதவி மையங்கள் அமைக்க வேண்டும் என்று இந்திய தொழில் கூட்டமைப்பை அவர் வலியுறுத்தினார்.

விசாகப்பட்டினத்தில் கூகுள் அமைப்பின் முதலாவது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மையம் தொடங்கப்பட உள்ளதாக திரு பியூஷ்கோயல் கூறினார்.

<<<<<<>>>>>

ஆயுஷ் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஆயுஷ் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்துறையில் **43** சதவீதம் மகளிர் பணியாற்றி வருவதாக கூறப்பட்டுள்ளது.

ஆயுஷ் மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மூலம், **17** லட்சத்து **60** ஆயிரம் பேர் பயனடைந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வரும் **2047-**ஆம் ஆண்டுக்குள் ஆயுஷ் சேவை மூலம், **31** ஆயிரத்து **800** கோடி டாலர் அளவுக்கு வருவாய் அதிகரிக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உள்நாட்டு தொழில்நுட்பத்தையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்துவது அவசியம் என்று மத்திய நிலக்கரி சுரங்கத்துறை இணையமைச்சர் திரு சதீஷ் சந்திர தூபே தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில் தொழில்நுட்ப மாநாட்டில் உரையாற்றிய அவர், உலக அளவில் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் துறையில் முன்னணி நாடாக இந்தியாவை மாற்றுவதற்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, செமி கன்டக்டர், விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இளம் ஆராய்ச்சியாளர்கள் பங்காற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

சுரங்கம், எரிசக்தி, தொழில்துறையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் அவசியத்தை திரு சதீஷ் சந்திர தூபே வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில்,

அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இதன் காரணமாக மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது ஜாலியன் வாலாபாக் நினைவிடம்.

***(Sound Byte — Voice - 1.40 Sec.)***

*பஞ்சாப் மாநிலம் அம்ரிட்சரில் உள்ள ஜாலியன் வாலாபாக் நினைவிடம் சுதந்திரப்போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.*

*கடந்த **1919**-ஆம் ஆண்டு பைசாகி நாளன்று ஆங்கிலேய ஜெனரல் **Dyer** -ன் உத்தரவின்படி நூற்றுக்கணக்கான சுதந்திரப்போராட்ட வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.*

*__Rowlatt__ சட்டத்துக்கு எதிராக ஜாலியன் வாலாபாக்கில் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.*

*நாட்டுக்காக இன்னுயிர் ஈந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவை போற்றும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த **2021** ஆகஸ்ட் **28**-ஆம் தேதி ஜாலியன் வாலாபாக் நினைவிடத்தை திறந்துவைத்தார்.*

*பஞ்சாப் கட்டிடக்கலை வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த நினைவிடத்தில் நான்கு அருங்காட்சியகங்கள் உள்ளன.*

*இதில் பஞ்சாபில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட வரலாறு குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளன.*

*நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுதந்திரப் போராட்டம் குறித்த தகவல்களை அளிக்கும் வகையில், ஒளி-ஒலி காட்சி நடத்தப்பட்டு வருகிறது.*

*ஜாலியன் வாலாபாக் நினைவிடம் சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

<<<<<<>>>>>

மின் பயன்பாட்டை கணக்கிடும் ஸ்மார்ட் மீட்டர்களை நாடு முழுவதும் நிறுவும் பணி நடைபெற்று வருவதாக மத்திய மின் அமைச்சகத்தின் இணைச்செயலாளர் திரு **Shashank Mishra** கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், நாடு முழுவதும் ஏழு கோடிக்கும் அதிகமான ஸ்மார்ட் மீட்டர்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும், **20** கோடி ஸ்மார்ட் மீட்டர்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

ஸ்மார்ட் மீட்டர்களை நிறுவும் பணியில் மின் பொறியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக கூறிய திரு **Mishra,** மின் கணக்கிடும்

பணிகளில் புதிய ஊழியர்கள் கவனத்துடன் செயல்படுமாறு கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு குடியிருப்பிலும் மின் பயன்பாடு குறித்து கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் மின் கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே மின் கணக்கீடு பணிகளை மேற்கொண்டு வருபவர்கள் புதிய வகை ஸ்மார்ட் மீட்டர் கணக்கீடுகளை சரியான முறையில் மேற்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று திரு **Shashank Mishra** கூறினார்.

<<<<<<>>>>>>

கனடா எழுத்தாளர் **Anne Carson**-னுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது படைப்புகளில் சமகால இலக்கியத்தில் செவ்வியல் வடிவங்களை கொண்டுவந்ததற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

ஸ்வீடனின் **Stockholm**-ம் **Royal Swdeish** அகாடமி இந்த விருதை அறிவித்துள்ளது.

ஒன்று புள்ளி இரண்டு மில்லியன் டாலர் பரிசுத் தொகையாக வழங்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>

இத்தாலியில் தேர்தல் சீர்திருத்தம் கொண்டுவருவதற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் அடிப்படையில், தேர்தலில் குறைந்தபட்சம் **42** சதவீதம் வாக்குகள் பெறும் கூட்டணிக்கு கூடுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிக்க வழிவகை செய்யப்பட உள்ளது.

இந்த சீர்திருத்தம், பிரதமர் திருமதி **Meloni** தலைமையிலான கூட்டணியின் அரசியல் வெற்றி என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

**Kigali** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 6-0** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Yash Chaurasia**-வை வென்றார்.

---------------

**Arctic** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-15, 21-15** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Riko-**வை வென்றார்

**<<<<<<END>>>>>>**